# Purananurudu Kanalakum Vazhviyal Sinthanaikal

**R. Venkatraghavan**
*Research scholar (Part-time), Department of Tamil, Loyola College*

**Dr. D. David Stanley**
*Associate Professor, Department of Tamil, Loyola college*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358645

**Abstract**

*Sangam literature to later literary works, ethical concepts were primarily emphasized. Although love life was extensively discussed in Sangam literature, a virtuous life was stressed within that context. The eighteen Kilkanakku texts that emerged after the Sangam period were entirely works of ethics. The Tirukkural beautifully explains what 'aram' (virtue/ethics) is, stating that 'aram' is that which never changes under any circumstances. The purpose of this article is to elucidate the nature and significance of ethics as emphasized in Purananuru, one of the Tamil literary works.*

***Keywords :*** *Practicing virtuous life, ethics in Purananuru, king's ethics, charity, character, hospitality.*

**References**

1. Purananuru: Text and Commentary, Puliyur Kesikan, Saradha Pathippagam, Chennai.
2. Varadarajan, Mu., History of Tamil Literature, Sahitya Akademi, 2014.
3. Tamil Civilization and Culture, Dr. A. Dakshinamurthy, Mohan Pathippagam, Chennai.
4. Fine Arts Fostered by Tamils, Mayilai Seeni Venkatasami, Pavai Publications, Chennai.

# புறநானூற்றில் காணலாகும் வாழ்வியல் சிந்தனைகள்

***ரா. வெங்கட்ராகவன்***
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை
இலயோலா கல்லூரி (தன்னாட்சி) சென்னை

***முனைவர் டோ.டேவிட் ஸ்டான்லி***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
இலயோலா கல்லூரி (தன்னாட்சி) சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*சங்க கால இலக்கியங்கள் தொடங்கி பிற்கால இலக்கியங்கள் வரை அற கருத்துக்களையே முதன்மையாக வலியுறுத்தின. சங்க இலக்கியங்களில் காதல் வாழ்க்கை பெரிதும் பேசப்பட்டாலும் அவ்வாழ்க்கையின் ஊடே அற வாழ்வே வலியுறுத்தப்பட்டது. சங்க காலத்திற்கு பின் எழுந்த பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் அற நூல்களாகவே தோன்றின. திருக்குறள் அறம் என்பதிற்கு அழகான விளக்கத்தை தருகின்றது. எந்த நிலையிலும் மாறாத ஒன்றே அறம் என்கிறது குறள். தமிழ் இலக்கியங்களில் ஒன்றான புறநானூறு வலியுறுத்திய அறத்தின் இயல்புகள் மற்றும் சிறப்புகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*
***முக்கியசொற்கள்:*** *அறவாழ்வை பின்பற்றுதல், புறப்பாடலில் அறம், அரசனின் அறநெறி, ஈகை, பண்புடைமை, விருந்தோம்பல்.*

## அறவாழ்வை பின்பற்றுதல்

ஒரு மனிதன் "இப்படித்தான் வாழ வேண்டும்" என்ற முறையான கோட்பாடுகளை விரித்துரைக்கும் நூல்களே அற நூல்கள் ஆகும். உலகிற்கு அன்பையும், பண்பையும் முழுமையாக எடுத்துரைக்கும் இந்நூல்களே மனித வாழ்விற்கு முதன்மையானதாகும். தமிழ் இலக்கியக் கோட்பாடு அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை முதன்மையாகக் கொண்டது.

அறம் என்ற சொல் "அறு" என்ற வினைச்சொல்லை ஒட்டி எழுந்தது. அறு என்ற சொல் வழியை உண்டாக்கு, உருவாக்கு போன்ற பொருள்களை தருகிறது. எனவே அறம் என்ற சொல்லானது மனித வாழ்க்கையை நெறிப்படுத்திட உதவிடும் வழியை உண்டாக்கும் கருத்தியல் என்ற பொருளில் வழங்கப்படுகிறது. தமிழர்களின் அக வாழ்விலும், புற வாழ்விலும் அறநெறியே மேலோங்கியது. அறநெறியை பின்பற்றியே தமிழரின் வாழ்வியல் அமைந்தது.

**சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்**
**அறத்து வழிப்படூஉம்**

என்கிறார் கோவூர் கிழார் என்ற புலவர்.

இதன் பொருள் அறத்தை பின்தொடர்ந்தே பொருளும், இன்பம் என்ற வீடுபேறும் வரும் என்பதாம். அறவாழ்வு வாழும் போதே நிலையான செல்வம் சேரும் என்ற உட்கருத்தும் இதனுள் பொதிந்துள்ளது.

சங்க கால புலவர்களும் அவர்களைப் போற்றி பின்பற்றியக் கவிஞர்களும் நீதிக் கருத்துக்களையே முன்னிறுத்தினர். அறம் ஒன்றே கரம் கொடுக்கும் என்ற கொள்கையுடன் நூல்களை இயற்றி மனித வாழ்வியலின் கொள்கையை வரி தோறும் பதிவு செய்து நிலை நிறுத்தினர்.

**அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை; அதனை**
**இறத்தலின் ஊங்கில்லை கேடு**

**- குறள்.32**

போன்ற வள்ளுவனின் மொழியின்படி அறம் ஒன்றே நன்மை பயக்கும். ஆகையாலே சான்றோர் யாவரும் அற வாழ்வை நம்பியே போற்றி வாழ்ந்து வழி நடத்தினர்.

**புறப்பாடலில் அறம்**

சங்க கால நூல்கள் புறம் - அகம் இரண்டையும் தரணிக்கு எடுத்துரைத்த முதன்மை நூல்கள். அவை என்றுமே வற்றாத நீரூற்று செல்வங்கள். சங்கப் பாடல்களில் புறப்பாடல்கள் தனிச் சிறப்பும், தனித்தன்மையும் பெற்றவை. புறநானூறும், பதிற்றுப்பத்தும் சங்க கால போரியல் முறைகளை எடுத்துரைக்கும் நூல்கள் ஆகும். புறநானூறு “தமிழர்களின் வாழ்வியல் களஞ்சியமாகத்” திகழ்கிறது.

புறம் என்பது ஒருவனுடைய கல்வி, புகழ். அரசியல், செல்வம், திறமை போன்ற வெளியுலக வாழ்க்கையை விளக்கும் இயலாகும். புறநானூறு புறம் சார்ந்த நூலாயினும் அறம் போற்றிய முதன்மையான நூலாகவும் திகழ்கின்றது. புறம் பாடிய புலவர்கள் செய்ந்நன்றி மறவாமலும், எப்படியும் வாழலாம் என்பதை நோக்காமல், இப்படித் தான் வாழ வேண்டும் என்று காட்டியுள்ளனர். இத்தகைய புலவர்கள் இயற்றிய நல்வழி இலக்கியங்களே புறப்பாடல்கள் ஆகும். புறநானூறு வாழ்வியல் அறமாக பிறருக்கு தீங்கு செய்யாமை, உணவளித்தல், உண்மையான நட்பு, அரசனின் அறநெறி, ஒற்றுமை, அன்புடைமை, ஈகை, விருந்தோம்பல் போன்ற பலவற்றை எடுத்துரைக்கிறது.

**அரசனின் அறநெறி**

அறத்தின் பொருள் அரசன் என்பது நாம் அறிந்த மொழியாகும். ஏனெனில் ஒரு அரசனே மக்களை பாதுகாக்கும் கருவியாவான். நல்வழிப்படுத்தும் தலைவனாவான். எனவே அறம் என்பது அரசனையே குறிக்கும். அத்தகைய தலைவன் நீதி தவறாமல் வாழ்தல் நன்று.

**அறநெறி முதற்றே அரசின் கொற்றம்**

என்றும்,

**எவ்வழி நல்லவர் ஆடவர்;**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே!**

என்றும்,

**நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்!**

என்றும் புறப்பாடல் வலியுறுத்துகின்றது. இதன் வழி அரசன் நீதி நெறி வழுவாமல் ஆட்சி செய்ய வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. அரசன் எவ்வழியை பின்பற்றுகிறானோ அவ்வழியையே மக்களும் பின்பற்றுவர் என்கிறது இப்பாடல்.

**ஈகை**

அறத்திற்கு தலையாய அறமாக ஈகையினைக் குறிப்பிடுகிறன புறநானூறு போன்ற சங்க இலக்கியங்கள். இந்த ஈகைப் பண்பே நம் சமூகத்திற்கு தலையாயதாகவும், பயனுள்ளதாகவும் கருதப்படுகிறது.

புறநானூற்றில் சோழன் நலங்கிள்ளியை புலவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் வாழ்த்திப் பாடும் போது தன்னிடம் உள்ள செல்வத்தைப் பிறருக்கு கொடுத்து உதவுவதே நல்வாழ்வு என்றார். செல்வம் சார்ந்த அனைத்தும் நிலையற்றது என்று நிலையாமையை அழுத்தமாக உணர்த்துகிறது புறநானூறு.

**அறுகுளத்து உகுத்தும் அகல்வயல் பொழிந்தும்**
**உறுமிடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்**
**வரையா மரபின் மாரி போலக்**
**கடாஅ யானைக் கழற்கால் பேகன்**
**கொடைமடம் படுதல் அல்லது**
**படைமடம் படான்பிறர் படைடமையக்**
**குறினே**

என்ற பாடலில் கடையெழு வள்ளலில் ஒருவனான பேகனைப் பற்றி பரணர் என்ற புலவர் சிறப்பித்து பாடுகின்றார். வருவோருக்கு வாரி வழங்கும் வள்ளல் தன்மை மிக்க பேகன் இன்னாருக்கு கொடுக்க வேண்டும். இன்னாருக்கு கொடுக்க கூடாது என்ற வேறுபாடின்றி வந்தோர் அனைவருக்கும் வாரி வழங்கினான். அத்தகைய கொடைச் சிறப்பானது உவர் நிலத்திலும், வயல் வெளியிலும், குளத்திலும் எவ்வித வேறுபாடின்றி ஒரே மாதிரியாக பொழியும் பெருமழையைப் போன்றது என்று பரணர் ஒப்பிடுகின்றார்.

**எத்துணை ஆயினும் ஈதல் நன்று - புறம் 141**

என்று பேகனின் சிறப்பை பரணம் மேலும் உரைக்கின்றார். மறுமையை எதிர்பார்த்து அவன் அளவின்றி கொடுப்பதில்லை என்கிறார் பரணர். இதன் மூலம் வள்ளன்மை என்பது எந்தவித பிரதிபலனையும் எதிர்பாராமல் செய்ய வேண்டும் என்கிறது இப்பாடல்.

இதன் மூலம் ஈகைத் தன்மையில் வேறுபாடு காட்டுதல் இருக்க கூடாது என்பதையும், இல்லாதோர்க்கு பேதமின்றி உதவிட வேண்டும் என்பதையும் சங்க இலக்கியப் பாடலான புறநானூறு வலியுறுத்துகின்றது.

## யாதும் ஊரே

மனிதனை மனிதன் மதித்தல் வேண்டும். மனிதனுக்கு மனிதன் வேறுபாடு இல்லை. உலகினில் உள்ள அனைவரும் உறவினரே என்ற அரிய கருத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கணியன் பூங்குன்றனார் புறநானூற்றின் மூலம் உலகிற்கு எடுத்துரைத்துள்ளார்.

**யாதும் ஊரே; யாவரும் கேளிர்**

என்ற இந்த உலகறிந்த மொழியானது ஒற்றுமைக்கான "உலக மொழியாக" இன்றளவும் திகழ்கின்றது. மனித இனத்திற்குள் வேறுபாடுகள் மலிந்து கிடக்கும் தற்காலத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வேற்றுமையில் ஒற்றுமை கண்ட தமிழரின் அறம் வியக்க வைக்கின்றது.

## பண்புடைமை

ஒருவருக்கு ஏற்படும் துன்பத்திற்கும், இன்பத்திற்கும் நாம் மட்டும் தான் காரணம். தான் செய்யும் செயலாலேயே என்பதை அனைவரும் அறிவர். ஆனால் நம் மனமானது உணர மறுத்து இன்பத்திற்கு தன்னையும், துன்பத்திற்கு பிறரையும் அடையாளம் காட்டுகிறது. இதனை உணர்த்தவே

**தீதும் நன்றும் பிறர் தர வாரா**

எனும் அறம் சார்ந்த புறமொழி தோன்றிது. இம்மொழியை உள்ளூற உணர்ந்தால் மனிதர்களுக்குள் சண்டை சச்சரவுகளும், போட்டி பொறாமைகளும் ஏற்படாது.

ஒரு மனிதன் மற்றவனுக்கு நன்மை செய்யாவிடினும், தீமை செய்யாமல் இருந்தாலே அது நன்மைக்கு ஈடாகும். இதுவே சான்றாண்மைக்கு அடையாளமாகும். இதனையே நரிவெரூத்தலையார்

**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின் - புறம்.195**

என்கிறார். நல்லது செய்யாவிட்டாலும் பரவாயில்லை தீயது செய்யாமல் இருங்கள் என்பதே இப்பாடல் வலியுறுத்தும் கருத்தாகும். இதன் மூலம் ஒருவருக்கு நன்மை செய்ய முடியாவிட்டாலும் தீமை செய்யாமலிருப்பதே சிறந்தது என்ற கருத்து புலப்படுகின்றது.

## விருந்தோம்பல்

"உடல் வளர்த்தேனே உயிர் வளர்த்தேன்' என்பார் திருமூலர். ஆகையால் அத்தகைய உடலை வளர்க்கும் உணவை அளிப்பவர் உயிர்க்காப்பவர் ஆவார். எனவே தான் விருந்தோம்பலைப் பற்றிக் கூறும் போது நம்மை நாடி வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று பரிவோடும், கனிவோடும் விருந்தளிப்பதே இல்வாழ்விற்கு உரிய தலைசிறந்த பண்பாடாகப் பழந்தமிழகம் போற்றுகின்றது என்பது நாம் அறிந்ததே. இதனையே வள்ளுவமும்

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து**

என்று கூறி விருந்தோம்பல் பண்பிற்கு முதலிடம் அளித்துள்ளது.

***தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள்,***
***நீள்நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்***
***இற்பொலி மகடூஉப் போலச்,***

*உள்ளது சிறியதாயினும், மிகப் பலர் வந்தனரே என்று கூறாது நீண்ட பந்தலின் கீழ் அனைவரையும் அமர்த்தி, அனைவருக்கும் பகிர்ந்து ஊட்டி மகிழ்பவள் என்று புறப்பாடல் சொல்கின்றது. இதன் மூலம் இருப்பததை பகிர்ந்துண்ணும் பண்பாடு புலப்படுகிறது.*

***உண்டால் அம்ம, இவ்வுலகம்; இந்திரர்***
***அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்***
***தமியர் உண்டலும் இலரே;***

*என்ற புறப்பாடல் இதனையே பகுத்துண்ணல் என்ற பொருளில் சொல்கின்றது. இந்திரனின் அமிர்தமே கிடைத்தாலும் அதனை தனக்கென்று உண்ணாது தமிழ்ப் பண்பாடு என்பதே இப்பாடலின் பொருளாகும். இதன் மூலம் பிறரோடு பகிர்ந்து உண்ணும் பண்பாடு புலப்படுகின்றது. இவ்வாறு பகுத்துண்ணும் பண்பாட்டாலேயே இவ்வுலகம் இயங்குகிறது என்கிறது இப்பாடல்.*

*புறநானூறு கூறும் அறங்களை மென்மேலும் அடுக்கிக் கொண்டே செல்லலாம். ஒருவன் எப்பொழுது நல்லவனாகவும், சான்றாண்மை உள்ளவனாகவும் ஆகிறான் என்றால் ஒருவருக்கு நல்லது மட்டும் செய்து பிறர் துன்பத்தில் உள்ள போது கேட்காமல் உதவி புரியும் போது ஆகும். அப்போதே ஒரு மனிதனின் நற்குணங்கள் வெளிப்படுகின்றன.*

## ***முடிவுரை***

*உண்மை, தாய்மை, சேய்மை குணம் அனைத்தையும் உள்ளடக்கி, தமிழனின் வாழ்வியல் சிந்தனைக் களஞ்சியமாகத் திகழும் புறநானூறு அறம் சார்ந்த நூலாகத் திகழ்கிறது. சங்க காலத்தில் தோன்றி இன்றளவும் மனித கருவூலமாக, இலக்கியத்தின் தனிப்பெரும் அடையாளமாகவும், வாழ்வியலை வழி நடத்தும் நூலாகவும் அமைந்திருக்கிறது புறநானூறு. இதிலுள்ள கருத்துக்கள் தற்காலத்திற்கும் பொருந்து பவையாக அமைந்துள்ளன.*

## ***துணை நூற்பட்டியல்***


1. *புறநானூறு மூலமும் உரையும், புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை*
2. *வரதராசனார்,மு., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாதெமி, 2014*
3. *தமிழர் நாகரிகமும் பண்பாடும், டாக்டர். அ. தட்சிணாமூர்த்தி, மோகன் பதிப்பகம், சென்னை*
4. *தமிழர் வளர்த்த அழகு கலைகள், மயிலை சீனி வேங்கடசாமி, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை*